IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw14 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **மாணிக்கம்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2024

நான் தற்பொழுது தென்காசி மாவட்டம், புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது ஊரைச் சேர்ந்தவர். 09.08.2022ம் தேதி இருக்கன்குடி கோவிலுக்கு மாலை போட்டவர்கள் பாதையாத்திரையாக முதலில் சென்றுவிட்டனர். இரண்டு நாட்கள் கழித்து 11.08.2022ம்

தேதி நான் மற்றும் 17 நபர்கள் இருக்கன்குடி கோவிலுக்கு குட்டியானை டாட்டா ஏசிஇ என்ற வண்டியில் சென்றோம். சிப்பிப்பாறை அருகே செல்லும் போது பெரிய டிப்பர் வண்டி எங்கள் வண்டியை இடித்தது. இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. நாங்கள் இருக்கன்குடியை நோக்கி சென்ற போது அந்த டிப்பர் லாரி எங்களுக்கு முன்னாடி வந்து எங்கள் வண்டியை தட்டிவிட்டு சென்றுவிட்டது. நாங்கள் பயணம் செய்த டாட்டா ஏசிஇ வாகனம் மற்றும் எங்கள் வாகனத்தை இடித்த டிப்பர் லாரியின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. லாரி இடித்ததில் எங்கள் வண்டியில் பயணம் செய்த எல்லாருக்கும் காயம் ஏற்பட்டது. ஒரு சிறுவன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டான். எனக்கு உள்காயம் ஏற்பட்டது. காயம்பட்டவர்களை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். பின்னர் நீலாவதி என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டார். கதிரேசன் என்னும் நபருக்கு தலையில் அடிப்பட்டது. இஷான் என்ற பையனுக்கு தலையில் அடிபட்டது. முத்தா என்ற பெண்ணுக்கு தலையில் அடிபட்டது. லாரியை ஒட்டியவரின் பெயர் சிவராஜ் என்றோ, சின்ராஜ் என்றோ சொன்னார்கள். நாங்கள் சென்ற வாகனத்தை சுந்தரமூர்த்தி என்பவர் ஒட்டியனார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

நாங்கள் சென்ற வாகனம் சரக்கு வாகனம் என்றால் சரிதான். சரக்கு வாகனத்தில் ஆட்களை ஏற்றி செல்லக்கூடாது என்றால் தெரியாது. நான் சென்ற வாகனம் முழுவதுமாக தார்பாயினால் மூடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்தில் எந்த பக்கத்தில் நான் உட்கார்ந்திருந்தேன் என்றால் ஓட்டுநருக்கு இடதுபுறத்தில் உட்கார்ந்திருந்தேன். சம்பவம் நடந்த போது நல்ல இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் என்ன வாகனம் அதை யார் ஓட்டிவந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்துக்காக இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் மனு தாக்கல் செய்துள்ளதாக கேள்விபட்டுள்ளேன். நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு கிடைக்க

வேண்டும் என்பதற்காக நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw15 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2024

நான் தற்பொழுது தென்காசி மாவட்டம், புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது ஊரைச் சேர்ந்தவர். சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை. இருக்கன்குடி கோவிலுக்கு குட்டியானை வண்டியில் 18, 19 நபர்கள் சென்றோம். இரவு 11.00 மணியளவில் சிப்பிப்பாறை என்ற ஊரின் வழியாக சென்ற போது வளைவில் சென்ற போது ஒரு லாரி

எங்கள் வாகனத்தின் மீது மோதியதில் எனக்கு இடுப்பில் அடிபட்டது. விபத்தில் இரண்டு நபர்கள் இறந்துவிட்டனர். பயணம் செய்த எல்லாருக்கும் காயம் ஏற்பட்டது. காயம்பட்டவர்களை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றனர். நாங்கள் பயணம் செய்த டாட்டா ஏசிஇ வாகனம் மற்றும் எங்கள் வண்டி மீது மோதிய லாரியின் பதிவு எண் எனக்கு தெரியாது. லாரியை ஓட்டியவரின் பெயர் எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

நாங்கள் சென்ற வாகனம் சரக்கு வாகனம் என்றால் சரிதான். சரக்கு வாகனத்தில் ஆட்களை ஏற்றக்கூடாது என்றால் சரிதான். நான் வாகனத்தில் எந்த பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன் என்றால் பின்பகுதியில் இடதுபக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். நாங்கள் சென்ற வாகனம் முழுவதுமாக தார்பாயினால் மூடப்பட்டிருந்தது என்றால் சரிதான். தார்பாயினால் நாங்கள் சென்ற வாகனம் மூடப்பட்டிருந்ததால் எதிரே வந்த வாகனம் எங்கியிருந்து எப்படி வந்தது என்று தெரியாது என்றால் சரிதான். எதிரரே வந்த வாகனம் என்ன வாகனம் என்றும், அதை யார் ஓட்டிவந்தார்கள் என்றோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது அதிகமாக இருட்டாக இருந்தது என்றால் சரிதான். வாகன விபத்து நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விபத்துக்கு காரணம் நாங்கள் சென்ற வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மட்டுமே என்றால் சரியல்ல. அதிகமான விபத்து நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் காயம்பட்டருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.